தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-12-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலையில் “அங்ககக் காய்கறி சாகுபடி” பயிலரங்கம்

அங்ககக் காய்கறி சாகுபடி குறித்த ஒருநாள் பணியரங்கம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 8.12.2017 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெற்றது. நிகழ்வில் 80க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனா.

நிகழ்வில் அங்கக வேளாண்மைத் துறைத் தலைவர் முனைவர் ஏ. சோமசுந்தரம் அவர்கள் அங்கக இடுபொருட்கள் உற்பத்தி, களை நிர்வாகம், அங்கக வழியில் பூச்சி நோய் நிர்வாகம் குறித்து விளக்கினார். ஐந்து வகையான இயற்கை பூச்சிவிரட்டிகள் உற்பத்தி குறித்த செயல்விளக்க பயிற்சிகளை முனைவர் கணேசன் செய்து காட்டினார். இயற்கை வேளாண்மை தொழில்நுட்பங்களை தெரிந்துகொள்ளும் வகையில் கண்காட்சி, மண்புழு உரத்தொழில்நுட்பம், இயற்கை உர தயாரிப்பு மற்றும் வயல்வெளிப் பார்வை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காய்கறிகளில் மாறிவரும் காலநிலைக்கேற்ப உணவுத் தன்னிறைவு அடைவு கருத்தரங்கத்தின் ஒருபகுதியாக நடைபெற்ற இப்பணியரங்கை கருத்தரங்க செயலாளர் காய்கறி பயிர்கள் துறைத் தலைவர் முனைவர் ஆறுமுகம் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்